பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 03 வெள்ளிக்கிழமை (18-12-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 22

## வடக்கு-கிழக்கு யுத்தத்தினால்
# இலங்கையின் பொருளாதார நிலை
# மேலும் மோசமடையும் ஆபத்து!

## சர்வதேச நிறுவனம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசம்பர். 18

வடக்கு - கிழக்கில் யுத்தம் தொடர்ந்தால் நாட்டின் பொருளாதார நிலை மிக மோசமான நிலையை அடையும்.

சர்வதேச பொருளாதார ஆய்வு நிறுவனம் ஒன்று இவ்வாறு இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

ஐக்கிய அமெரிக்க பொருளாதார ஆய்வு நிறுவனம் ஒன்றே இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

2000 ஆண்டளவில் இலங்கை ஒரு புதிய கைத்தொழில் நாடாகுவதற்கான சாத்தியப்பாடு உண்டா என்பது குறித்து ஆய்வு நடத்திய பின்னர் அந்த நிறுவனம் விடுத்த அறிக்கையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

தென்னாசியப் பிராந்தியத்தில் ஏனைய நாடுகள் சுதந்திரத்துக்குப் பிறகு பொருளாதார ரீதியில் பன்மடங்கு வளர்ச்சியடைய இலங்கை மட்டும் பின்தங்கிச் செல்கிறது. ஏற்றுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பும் வீழ்ச்சியடைந்து வருகிறது.

1983 இற்குப் பின்னர் வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் பொருளாதாரம் மேலும் மோசமடையத் தொடங்கியுள்ளது.

யுத்தம் நிறுத்தப்படாதவரை பொருளாதார வளர்ச்சியை இலங்கை எட்டுவது சாத்தியப்படாது.

இலங்கையின் மனித உரிமை மீறல்களினால் அதிருப்தியடைந்துள்ள உதவும் நாடுகள் இலங்கைக்கு வழங்கும் கடனை உத்தேசித்த தொகையிலும் குறைவாகவே வழங்கி வருகின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், டிச. 18

விடுதலைப் புலிகளின் தமிழீழ நிதித்துறையினர் நாளை சனிக்கிழமை கரவெட்டி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மீட்பு நிதி சேகரிக்கவுள்ளனர்.

கரவெட்டி. உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களிடம் காலை 8 மணி தொடக்கம் 10:30 வரை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும், பின்னர் பிற்பகல் 11 மணி தொடக்கம் 1 மணி வரை நெல்லியடி மகா வித்தியாலயத்திலும்—

பருத்தித்துறை உ. அ. அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களிடம் பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரை வட இந்து மகளிர் கல்லூரியிலும் வைத்து நிதி சேகரிக்கப்படும்.

இதே வேளை இன்று வெள்ளிக்கிழமை நாவற்குழி ம.வி., கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., மட்டுவில் ம.வி., சாவகச்சேரி மகளிர் ம.வி., வரணி ம.வி., கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மவை ம.வி., ஆகியவற்றில் வைத்து தென்மராட்சிப் பகுதி மக்களிடம் இருந்து மீட்பு நிதி சேகரிக்கப்படும். (ஓ)

## 23இல் வரும் குமணவில் 800 தபாற் பொதிகள்

எதிர்வரும் 23 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் குமண கப்பலில் சுமார் 800 தபாற் பொதிகள் அனுப்பிவைக்கப்படும் என்று கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

நீண்டகாலமாக தபால்கள் கப்பல் மூலம் அனுப்பப்படாததால், இங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து யாழ். மாவட்ட பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் அஞ்சல் மா அதிபருடன் தொடர்பு கொண்டு தெரிவித்த போது நேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

தபால் சேவை சீர்குலைவு, தபால்கள் உடைக்கப்படுவது போன்ற விடயங்கள் குறித்துப் பேசுவதற்காக பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் நேற்று கப்பல் மூலம் பலாலி சென்று அங்கிருந்து கொழும்பு செல்ல ஏற்பாடாகி இருந்தது. (ஓ-3-5)

## தெரிவுக்குழுவால் தீர்வு காணமுடியவில்லை!

### தலைவர் மங்கள அறிவிப்பு

கொழும்பு, டிச. 18

வடக்கு - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக தீர்வொன்றை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினால் காண முடியாமற் போய்விட்டதாக அக்குழுவின் தலைவரான திரு. மங்கள முனசிங்க சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தின் மூலம் நாடாளுமன்றத்திற்கு தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் கேட்கும் பிரதேசம் தொடர்பான கோரிக்கையை நிறைவேற்ற முடியாமற் போனதாகவும் திரு முனசிங்க தெரிவித்துள்ளார்.

(விவரமான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## 2 லட்சம் மாணவர்கள் சீருடை பெறுவர்

### ஜனவரி 18இல் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 18

யாழ். மாவட்டத்தில் சுமார் 2லட்சம் மாணவர்கள் சீருடைகளைப் பெறவிருக்கிறார்கள்.

"குமண" கப்பல் மூலம் வந்துசேரும் சீருடைகள் அடுத்த மாதம் 18ஆம் திகதி மாணவர்களுக்கு சம்பிரதாய பூர்வமாக வழங்கப்படவிருக்கின்றன.

முதலாம் ஆண்டுக்கும் ஐந்தாம் ஆண்டுக்கும் இடைப்பட்ட 45 ஆயிரத்து 262 மாணவர்களும், 43 ஆயிரத்து

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வை கடலில் பீரங்கித் தாக்கு

வல்வெட்டித்துறை, டிச. 18

வல்வைக் கடல் பகுதியில் நேற்று அதிகாலை வேளை, ஸ்ரீலங்கா கடற்படை கப்பலில் இருந்து பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. (ஓ-155)

## ஹெலி நோட்டம்

வல்வெட்டித்துறை, டிச 18

தொண்டமனாறு, வல்வெட்டித்துறைப் பகுதிகளை நேற்றுக் காலை 9-45 மணியளவில், ஹெலி ஒன்று நோட்டமிட்டுச் சென்றது. (ஓ-155)

## அகதி முகாம்களை மூடுவதற்கு முடிவு

யாழ்ப்பாணம், டிச. 18

வவுனியா மாவட்டத்தில்— இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் அமைந்திருக்கும்— ஆசிக்குளம் அகதி முகாம் தவிர்ந்த ஏனைய அகதி முகாம்கள் அனைத்தையும் மூட ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தாண்டிக்குளம் உட்பட ஏனைய இடங்களில் உள்ள அகதிகளும்—

தமிழகத்தில் இருந்து திரும்பும் தமிழ் அகதிகளும் ஆசிக்குளம் முகாமிலேயே இனிமேல் தங்கவைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆசிக்குளம் முகாமில் தற்போது 300 குடும்பங்கள் தங்கியுள்ளன. (உ-3)

## சுழிபுரம் பகுதி நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்

சுழிபுரம் பகுதியை நோக்கி நேற்றுக் காலை 8 10 மணியளவில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன, அப்பகுதிகளில் அடுத்தடுத்து பன்னிரண்டுக்கும் மேற்பட்ட ஷெல்கள் விழுந்து வெடித்தன.

சுழிபுரம் வடக்கு சிவன் கோவிலடி, பறாளாய், காட்டுப்புலம், பனிப்புலம், சுழிபுரம் பிள்ளையார் கோவிலடி வயல்பகுதி ஆகிய இடங்களிலேயே ஷெல்கள் விழுந்து வெடித்தன. தெய்வாதீனமாக விபரீதம் எதும் நிகழவில்லை.

இதேவேளை—

காரைநகர் படைமுகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 7 30 மணி தொடக்கம் 10 மணி வரை கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

வலி. வடக்கு பகுதியிலும் நேற்று முன்தினம் இரவு ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றன. (ஓ-3-28-15)

## கப்பல் சேவையை தொடர அரசிடம் வலியுறுத்தப்படும்

### அதிகாரி கொழும்பு பயணமாகிறார்

யாழ்ப்பாணம், டிச. 18

யாழ். மாவட்டத்தின் உணவு நிலைமை தொடர்பாக கொழும்பில் அவசரப் பேச்சு நடத்துவதற்காகவும். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் நேற்று இங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

வடக்கே சேவையில் ஈடுபடுத்தப்படும் கப்பல்களின் சேவையை இடைநிறுத்துவது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அறிவித்திருந்தது பற்றியும்—

தரைவழிப் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்ட நிலையில் இங்கு உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டு நிலை குறித்தும் கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து அவர் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் நாயகம், புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் மற்றும் முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து கப்பல் சேவையை இடையூறின்றி தொடர்ந்து நடத்துவதற்கு வசதி செய்யுமாறு அவர் வலியுறுத்துவார்.

பருத்தித்துறையில் இருந்து 'குமாரி' கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குச் சென்று அங்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழுவின் முடிவுகள் குறித்து சபாநாயகருக்கு மங்களா அறிவிப்பு

கொழும்பு, டிச. 18

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரான திரு. மங்கள முனசிங்க, தெரிவுக் குழுவினால் எடுக்கப்பட்ட முடிவுகளைத் தெரிவிக்கும் வகையில், சபாநாயகர் எம். எச். முஹம்மதுவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

"சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றைக் காணுவதற்கான சகல வழிகளையும் குழு ஆராய்ந்தது.

வடக்கு-கிழக்கை இரண்டு தனித்தனி மாகாணங்களாகக் கருதி இரண்டு சபைகளை அமைப்பதற்கும்—நிர்வாகத்தை இந்தியாவில் உள்ளதைப்போல அதிகாரப் பரவலாக்கத்தைக் கொண்டு வருவதற்கும்—தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கம்யூனிஸ்ட்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி என்பன இணங்கியுள்ளன.

யாழ். மாவட்ட எம். பி. கே. ஸ்ரீநிவாசன், மட்டக்களப்பு மாவட்ட எம். பி. பஷீர் சேகுதாவூத் ஆகியோர் இத்தீர்மானங்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதி, வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக இயங்கவேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

ஆறு தமிழ்க் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்த இரண்டு எம். பிக்களும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளும் மற்றைய கட்சிகளினால் எடுக்கப்பட்ட இந்த முடிவுகளுக்கு இணங்கவில்லை.

தெரிவுக்குழு இந்த முடிவுகளை உள்ளடக்கிய இந்த அறிக்கையை அடுத்த மாதத்தில் சமர்ப்பிக்க இருக்கிறது.

நாடாளுமன்றத்தினால் அளிக்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைய, தெரிவுக்குழு தனது முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்"—

இவ்வாறு தமது கடிதத்தில் திரு. மங்கள முனசிங்க குறிப்பிட்டிருக்கிறார்.

சபாநாயகர் எம். எச். முஹம்மது நாடாளுமன்றத்தில், நேற்று முன்தினம் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்ட சமயத்தில் மங்கள முனசிங்கவின் கடிதத்தை வாசித்தார். (த-எ)

## 40 சு. க. எம்.பிக்கள் கட்சி ஒழுங்கை மீறினர்

### சிறிமாவோ அறிவிப்பு

40 சுதந்திரக் கட்சி எம். பிக்கள் சுதந்திரக் கட்சியின் ஒழுங்கு விதிகளை மீறி நடந்துள்ளனர்.

இவ்வாறு சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.

40 சுதந்திரக் கட்சி எம். பிக்களுக்கும் இதனை கடித மூலம் திருமதி பண்டாரநாயக்கா தெரியப்படுத்தி இருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. (த-எ)

## 377 பேர் கைது

கொழும்பு, டிச 18

பொய்யான ஆவணங்களுடன் வெளிநாடு செல்லமுனைந்த 377 பேர் இவ்வாண்டில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கனடா, இங்கிலாந்து, ஜேர்மனி, இத்தாலி, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு செல்ல முற்பட்டபோதே கைது செய்யப்பட்டதாக இரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (த-6)

## மழை வீழ்ச்சி

கொழும்பு, டிச. 18

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் நாட்டிலேயே மிகக் கூடுதலான மழை பெய்ததாக அறிவிக்கப்படுகிறது. 64 6 மில்லி மீற்றர் மழை அங்கு பெய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-எ)

யாழ். மாவட்டத்துக்கு

# 7 லட்சத்து 50 ஆயிரம் இலவச பாடப் புத்தகம்

கொழும்பு, டிச. 18

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 7 லட்சத்து 50 ஆயிரம் இலவச பாடப் புத்தகங்கள் ஏற்கனவே கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

மேலும், 2 லட்சத்து 50 ஆயிரம் புத்தகங்களை இம் மாவட்டத்துக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலவச பாடப் புத்தக விநியோகம் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் முடிவடைந்துவிடும் என்றும்—

ஏற்கனவே ஒரு கோடி 60 லட்சம் பாட நூல்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று முதல் இம் மாதம் 31ஆம் திகதி வரை 928 நிலையங்களில் இலவச பாடப் புத்தக விநியோகம் இடம் பெறும். (த-எ)

# வட-கிழக்கு இணைப்பை அரசு தொடர வேண்டும்

### மட்டு. எம். பி. சொல்கிறார்

கொழும்பு, டிச. 18

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை வடக்கு - கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்பை அரசாங்கம் தொடர வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட த. வி. கூ. எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் கடந்த புதன் கிழமை நாடாளுமன்றத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார். (த-எ)

# தடுப்பு காவலில் உள்ள தமிழர் விவரம் சேகரிப்பு

நாட்டின் பல பகுதிகளிலும் ஆகாகி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் பெயர் மற்றும் விபரங்களை முன்னாள் நீதியரசர் ஜே எப். ஏ. சூஸா தலைமையிலான மனித உரிமைகள் பணியகம் பெற்றுள்ளது.

1988 முதல் 1992 ஆம் ஆண்டு வரை கொழும்பு மகஸீன் சிறைச்சாலையிலும்—

1990 முதல் 1992 வரை களுத்துறை சிறைச்சாலையிலும் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விபரங்களே இவ்வாறு திரட்டப்பட்டுள்ளன. மகஸீன் சிறையில் உள்ள 828 பேரின் விவரங்களும் களுத்துறை சிறையில் உள்ள 604 பேரின் விவரங்களும் மனித உரிமைகள் பணியகத்திடம் தற்போது உள்ளன.

இவ்விபரங்களை மட்டக்களப்பு சமாதானக்குழுவின் அலுவலகத்திலும் மனித உரிமைகள் பணியக அலுவலகத்திலும் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. காணாமல் போனவர்கள் பற்றி தகவல் பெற விரும்புவோர் மனித உரிமைகள் பணியகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். (த-எ)


## நத்தார் இசை நிகழ்ச்சி

இடம்: வேலாயுதம் மகா வித்தியாலயம், பருத்தித்துறை.

நேரம்: 18 — 12 — 1992 வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணி

★ காதுக்கினிய பாடல்கள்.
★ "தொல்லுலகை மீட்க வந்த இயேசுபரன்" வில்லிசை
★ வாழ்க்கையை மாற்றும் செய்தி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிறிஸ்து ஸ்தானாபதிகள் அசெம்பிளி ஒப் கோட், பருத்தித்துறை.

(23679)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கணக்கியல்: S. K. பிரபாகரன்

சனி, ஞாயிறு வினா - விடை வகுப்புக்கள்

ஆரம்பம்: 19 - 12 - 1992 (4-30 — 6-00)

★ 92 ஆம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்களின் நன்மை கருதி ஆரம்பமாகின்றது.
★ வாரத்தில் 8 மணித்தியாலம் நடைபெறும்.

(இ-2835)

## உதயன் அக்கடமி

பருத்தித்துறை வீதி, நல்லூர்.

ஆண்டு 4, 5 (புலமைப்பரிசில்)

6, 7, 8, 9, 10, 11 ஆம் ஆண்டிற்கான

புதிய பிரிவு ஆரம்பம்: 19 - 12 - 1992

(23685) பிற்பகல் 3மணி

## NEW MATHS ACADEMY

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L PHYSICS


சங்கர்

MECHANICS சனி & ஞாயிறு 7–8 a. m.
LIGHT சனி & ஞாயிறு 8-9 a. m
HEAT செவ். & வியா. 4–5p. m.
ELECTRICITY செவ். & வியா. 5–6p m.

ஆரம்பம்: 19 — 12 — 1992 சனி 7 a. m.

(இ-2841)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னையின் மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 10 |  | 30 |
| — | | — |
| 03 | | 12 |
| — | | — |
| 1942 | | 1991 |

அமரர்

### கதிரவேலு வேலுப்பிள்ளை

திதி: தசமி 18—12—1992

ஆண்டு ஒன்றானதோ - ஆனாலும்
உம் அன்பு அன்னையின் உள்ளமும்
நீர் கைபிடித்த நாள்முதல்
உம் குடும்பத்தைக் கண்கலங்காமல் பார்த்த
அன்பு மனைவியின் நெஞ்சமும்
அவர் ஈன்ற இளஞ் சிறார்களின் உள்ளமும்
உம் சகோதரிகளின் மனமும் வாடுகின்றது
இத்துயர் எவ்வாண்டில் தீரும்!

உங்கள் பிரிவால் துயருறும்;
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

105/1, கண்டிறோட்,
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

(23640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மைக்கோல் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. அருணாசலம், ஆசிரியர் சிறுப்பிட்டி தெற்கு. நீர்வேலி. (23669)

### மணமகன் தேவை

சைவ மதம், செவ்வாய்க் குற்றமற்ற (கிரகபாவம் 16. மூலம் 4ஆம் பாதம்) பல்கலைக்கழகத்தில் வேலை செய்யும் 34 வயதுப் பட்டதாரிக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (23675)

### மணப்பெண் தேவை

27 வயது. (2இல் செவ்வாய், பரணி, கிரகபாவம் 22) கொழும்பிலுள்ள வர்த்தகருக்கு மணப்பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (23676)

### மணமக்கள் தேவை

ஆண் 37 வயது (12இல் செவ்வாய், பரணி கிரகபாவம் 20) Accountantக்கும், பெண் 40 வயது. (4இல் செவ்வாய், பூசம், கிரகபாவம் 17) கணித ஆசிரியைக்கும் தனியாகவோ, மாற்றாகவோ செய்யப்படும். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (23677)

### தவறிவிட்டது

கைச்சங்கிலி ஒன்று 13-12-1992 அன்று யாழ். மருத்துவமனை வீதியில், புத்தூர் இருபாலை - டச்சுவீதி, ஆரியகுளம் சந்திக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து முருகன் கிரோசரி, சிறுப்பிட்டி என்னும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (23665)

### திருமண சேவை

கனடாவில் நிரந்தரமாக வேலை செய்யும் R. C. 31, 28 வயது. ஆண்களுக்கு கொழும்பில் திருமணம் செய்யக்கூடிய பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (23678)

### கலர்பிலிம் பிறின்ரிங்

நியாய விலையில், துரித கதியில் கலர் பிலிம்களை பிரதிபண்ணம் செய்ய நாடுங்கள்: குயின் போட்டோ, மணிக்கூட்டு வீதி, (எழிலகத்துக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (5644)

### இலவச திருமண சேவை

40 வயது, பூசம், அரசவிதருக்கு ஏற்ற மணமகன் தேவை. அரச/தனியார்துறை விரும்பத்தக்கது. சகல தரங்களில் மணமக்கள் உண்டு. து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23636)

29 வயது, உத்தரம் 1, செவ்வாய் 1, U. K. இல் Computer Hardware தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில்.து விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (23634)

## LOTUS 1,2,3
**2 MONTHS**

புதிய பிரிவு
ஆரம்பம்:
**21-12-1992**

★ கட்டணம் தவணை முறையில்

★ BASIC. I. A. B. SHORT HAND-TYPING நடைபெறுகின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd, CROSS STREET, JAFFNA
(C-2843)

## கௌரவிப்பு விழா

தென்மராட்சி இளைப்பாற்று
வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கம்
சாவகச்சேரி.

மேற்படி சங்கத்தின் உறுப்பினரும் சோஷகருமாகிய வைத்திய கலாநிதி த. சிவராசா அவர்கள் யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதைக் கௌரவிக்கும் வண்ணம் 20-12-1992 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் சிறப்புடன் நடைபெறும் வைபவத்தில் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

விழாவிற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

பூ. வெற்றிவேலு, தலைவர்.
த. இரத்தினராசா, செயலாளர்.
(23656)

## நாவலர் கல்விக் கழகம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

**ஆண்டு 5**

புலமைப் பரிசில் பரீட்சைக்கான புதிய பிரிவு
ஆரம்பம்: **19-12-1992**
சனி காலை 10-30 மணி

தமிழ் — சி. குழந்தைவேலு
கணிதம் — [ T. S. குணாளன்
ஈசன்

★ வாரத்தில் 5 தமிழ் வகுப்புகளும், 5 கணித வகுப்புகளும் நடைபெறும்.
(சி-4004)

## ஆண்டுகள் மூன்றின் ஆறாத நினைவுகள்

உதிப்பு:
13
03
1959

உதிர்வு:
21
12
1989



திருமதி
**சரஸ்வதி அம்மா கிருஷ்ணன்**
திதி: 18 12 1992

கட்டைதனில் அடுக்கியுடை கனலாக்கிட்டு
கடலினிலே சாம்பலென கரைத்திட்டாலும்
விட்டகலவில்லை உந்தன் அழகுத்தோற்றம்
விரைவுகின்ற குமிண்சிரிப்பும் ஒருங்கே சேர்ந்து
கட்டழகு மாறாத கருணையுற்றாய்
கலங்கரை போல் நின்று காக்கின்றாய்
எட்டட்டும் நின் ஆன்மா இறைவன்பாதம்
இறைஞ்சுகின்றோம் சாந்திக்காய் இவணுறைந்தே.

— குடும்பத்தினர்.

24, இந்திராபுரம்,
முள்ளானை.
(சி-3997)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**து. கிரித்திகா (கிருஷ்ணா)**

மலர்ந்தது: 05 — 09 — 1987
உதிர்ந்தது: 18 — 12 — 1991

திதி: 04 — 01 — 1993

ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல நயினை நாகபூஷணியை வேண்டுகின்றோம்.

மு. துரைரத்தினம்,
(அம்பாள் சாறி சென்ரர்)
குடும்பத்தினர்.

பருத்திக்கலட்டி,
சுன்னாகம்.
(5434)

## நாவலர் கல்விக் கழகம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

நாவலர் கல்விக் கழகம்
NAAVALAR KALVI KALAHAM

**O/L** புதிய பிரிவு [1993]
(சகல பாடங்களும்)

சமூகக்கல்வி:
**K. S. முத்துலிங்கம்**
(சி-4000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புத்திமதியைப் புரிந்துகொள்வரா?

இலங்கையில் நடந்து வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகத் தீர்வு ஒன்றைக் காண்பதில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடும் சாத்தியத்தை நிராகரிக்க முடியாது — இவ்வாறு அரசாங்க சார்புப் பத்திரிகை கருத்து வெளியிட்டிருக்கிறது.

அவ்வாறு ஐ. நா. தலையீட்டு இனப்பிரச்சினையைத் தீர்க்கும் அவமானத்தைத் தேடிக் கொள்ளாமல், அதற்கு முன்னரே, உள்நாட்டு மட்டத்திலேயே பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று அந்தப் பத்திரிகை புத்திமதியும் கூறியிருக்கிறது.

ஆனால் தென்னிலங்கைத் தலைவர்களோ எவரது புத்திமதியையும் கேட்கமாட்டார்கள். தங்கள் புத்தியையும் நல்வழியில் பயன்படுத்தமாட்டார்கள் என்பதே உண்மை.

பதினேழு மாதங்களாக கூடிப் பேசியும் தெரிவுக் குழுவில் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத திட்டம் ஒன்றை வகுத்திருப்பது அதனையே காட்டுகிறது!

வெளியுலகம் தெரியாதவர்களாக, இன்றைய உலக நடைமுறை தெரியாதவர்களாக, முழு இலங்கையையும் சிங்களவரே ஆள வேண்டும், இது சிங்களவர் நாடு என்ற எண்ணத்துடன் கிணற்றுத் தவளைகளாகச் செயற்படுகிறார்கள் அவர்கள். அவ்வாறு இல்லையெனில் தமிழர்களுக்கு 1957ஆம் ஆண்டில் வழங்க இணங்கிய உரிமைகள் கூட இல்லாத ஒரு திட்டத்தைத் தயாரிப்பார்களா?

முப்பத்தைந்து வருடங்களில் உலகம் எவ்வளவு மாறியிருக்கிறது. அரசியல் விவகாரங்களில் எத்தனை புதிய பரிமாணங்கள் தோன்றியுள்ளன. ஆண்டான், அடிமை பறுவன் என்ற நிலையை நீக்குவதிலும், மக்களின் சுயாட்சி உரிமைகளை நிலை நிறுத்துவதிலும் எத்தனை நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன என்பதை எல்லாம் சிங்களத் தலைவர்கள் கவனத்தில் எடுப்பதாக இல்லை.

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற உள்ளத்தூய்மையோடு, நீதி நியாயத்தோடு சிங்களத் தலைவர்கள் செயற்படின் அது தீர்க்க முடியாத ஒன்றல்ல. மனம் உண்டானால் இடமுண்டு.

ஆனால் சிங்களத் தலைவர்களிடம் பிரச்சினையை நீதியாகத் தீர்த்து வைக்க மனம் இல்லை. அதனாலேயே பிரச்சினை இழுபடுகிறது. யுத்தம் நீடிக்கிறது. தேவையற்ற உயிரிழப்புகள் தொடர்கின்றன. மொத்தத்தில் நாடும் சீரழிகிறது.

உலக நடப்புகளை அனுசரித்து, தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சிங்களத் தலைவர்கள் தவறும் பட்சத்தில், அது உள்நாட்டு விவகாரம் என்ற வட்டத்தை விட்டு வெளியே சென்று சர்வதேச விவகாரமாகிவிடும். அதனைத் தவிர்க்க முடியாது.

அரச சார்புப் பத்திரிகை விடுத்துள்ள எச்சரிக்கையாவது சிங்களத் தலைவர்களை யதார்த்த நிலைக்குக் கொண்டு வருமா என்பது சந்தேகமே. ஆகையால் இலங்கையின் இனப்பிரச்சினை உலக மட்டத்திற்குச் செல்வது தவிர்க்க முடியாததாகவே முடியும்.

# மொஸாம்பிக் உள்நாட்டு யுத்தத்தில்
# ஐ.நா. பாதுகாப்பு சபை தலையிடும்

வாஷிங்டன், டிச. 18

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள மொஸாம்பிக் நாட்டில் நீண்டகாலமாக நடந்து வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருமுகமாக அந்த நாட்டில் தலையிடுவது என்று ஐ. நா. பாதுகாப்புச் சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

மொஸாம்பிக்கில் நீண்டகாலமாகச் சண்டையிட்டு வரும் பிரெலிமோ அரசுப் படைகளும், ரெனமோ கெரில்லாக்களும் அண்மையில் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கை அமுலாக்கப்படுவதைக் கண்காணிக்கவும்- அங்கு தேர்தலை நடத்தவும் வழி செய்யுமுகமாக ஐ.நா வின் தலையீடு இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரெலிமோ படைகளுக்கும் ரெனமோ கெரில்லாக்களுக்கும் இடையேயான சமாதான உடன்படிக்கை கடந்த அக்டோபரில் இத்தாலி நாட்டின் தலைநகர் ரோமில் வைத்துக் கைச்சாத்திடப்பட்டது. இந்த உள்நாட்டு யுத்தத்தில் பத்து லட்சத்துக்கு அதிகமானோர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்போது சண்டை நின்றுவிட்டதாக அரசு அறிவித்துள்ளது. அங்கு அமைதிப் பணியை மேற்கொள்ள 7 ஆயிரத்து 500 படையினரை ஐ. நா. அனுப்பவுள்ளது.

இந்த ஆண்டில் ஐ. நா. தமது அமைதி காக்கும் படையை அனுப்பவுள்ள நான்காவது நாடு மொஸாம்பிக் ஆகும்.

ஏற்கனவே உள்நாட்டு யுத்தத்தினால் சீரழிந்துள்ள அங்கோலா, கம்பூச்சியா மற்றும் யூகோஸ்லேவியாவில் உள்ள பொஸ்னியா ஆகிய நாடுகளில் அமைதிப் பணியை மேற்கொள்ள ஐ. நா. தமது படையினரை அனுப்பி வைத்துள்ளது தெரிந்ததே.

(த-எ)

## வெளிநாடு சென்ற லஞ்ச ஆணையாளர் நாடு திரும்பமாட்டார்

தற்போது வெளிநாடு சென்றுள்ள லஞ்ச ஆணையாளர் திருமதி நெலும் கமகே மீண்டும் இலங்கை திரும்பமாட்டார் எனத் தெரிய வருகிறது.

இலங்கைப் புகையிரதப் பொதுமுகாமையாளர் உட்பட அரசாங்க அதிகாரிகள் அரசியல்வாதிகள் பலர் மீது சாட்டப்பட்டுள்ள லஞ்சக் குற்றங்கள் தொடர்பாக அவருக்கு சுதந்திரமாக பணியாற்ற முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாலேயே அவர் இந்த முடிவை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

(த-6)

## ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சின் நேற்று சீனா விஜயம்

பீஜிங், டிச 18

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் ஒன்றை மேற்கொண்டு ரஷ்ய ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் நேற்று சீனா போய்ச் சேர்ந்தார்.

நான்கு நாள் விஜயத்தின் போது இவர் சீனத் தலைவர்களுடன் முக்கிய பேச்சுக்களை நடத்துவதுடன் நல்லுறவு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடுவார்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் உருவான ரஷ்யாவின் ஜனாதிபதி ஒருவர் சீனாவுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது.

(த-எ)

## மாதாந்த உதவிப் பணம்

பண்டத்தரிப்பு, பிரான்பற்று, இளவாலை, மாரீசன்கூடல், மாதகல், மாதகல் மேற்கு ஆகிய உப தபால் மற்றும் உபதபால் அலுவலகங்களில் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவுகளை பெற்று வந்த பொதுமக்கள்— செப்டம்பர், அக்டோபர் மாத கொடுப்பனவுகளை சங்கானை தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

(ச)

## படையினரின் நிதித் தேவை; ஈடுசெய்யவே பாதுகாப்பு வரி

### அமைச்சர் ஹரேந்திர கொரியா சொல்கிறார்

கொழும்பு, டிச. 18

"தற்போதைய நிலைமை சாரணமாக ஆயுதப்படையினருக்கு பெரும் நிதி உதவி தேவைப்படுவதால், பாதுகாப்பு வரி விதிக்க வேண்டியுள்ளது"

இப்படிக் கூறுகிறார் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் திரு. ஹரேந்திர கொரியா.

பாதுகாப்பு வரிச் சட்டமூலம் கடந்த செவ்வாய் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்பட்ட சமயம் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தற்சமயம் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதில் அரசு முழு அக்கறை கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இச் சட்டமூல விவாதத்தை முடித்துவைத்துப் பேசிய வெளிவிவகார அமைச்சரும், நிதித்துறை ராஜாங்க அமைச்சருமான ஹரோல்ட் ஹேரத்- பாதுகாப்பு வரி ஒரு நிரந்தர நடவடிக்கை அல்ல என்றும், இந்த வரி மூலம் கிடைக்கும் பணம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்படும் என்றும் கூறினார்.

(த-3)

## யாழ்.விளையாட்டு துறைக்கு 2 லட்சம் ரூபா ஒதுக்கீடு

அலி. மேற்கு. டிச. 18

யாழ் மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை வளர்ப்பதற்கு 1993ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 2லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், நல்லூர், மருதங்கேணி ஆகிய ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளுக்கு ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ச-175)

## தெரிவுக்குழு பற்றி விமர்சிப்பது யானையைப் பார்த்த குருடனின் கதை

### அஷ்ரப் சொல்கிறார்

கொழும்பு, டிச. 18

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கை வெளிவருவதற்கு முன்னர் அதனை விமர்சிப்பது யானையை பார்வையற்றவர்கள் விமர்சித்த கதை போன்று இருக்கும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல எம். பியுமான ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் முன்கண்ட வாறு நாடாளுமன்றத்தில் செவ்வாய் அன்று தெரிவித்தார்.

தற்போது பந்து தமிழர் கட்சிகளின் பக்கமே உள்ளது என்றும் அவர் கூறினார்.

## புலிகளின் நடவடிக்கைகள்; கன்ரபரி ஆர்ச் பிஷப் கருத்து

கொழும்பு, டிச. 18

பிரிட்டனில் ஐரிஷ் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒத்ததாக விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இருந்தாலும், ஐரிஷ் தீவிரவாதிகளின் தாக்குதல்களிலும் பார்க்க விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் மிகப் பெரிய அளவிலானவையாக அமைந்துள்ளன.

கன்ரபரி ஆர்ச் பிஷப் அதி. வண. டாக்டர் ஜோர்ஜ் கேரி கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப் பிரச்சினையில் நீதியான தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன் என்றும் அவர் மேலும் அதில் தெரிவித்துள்ளார்.

(த-எ)

## நரசிம்மராவ் அரசு மீது நம்பிக்கையில்லா பிரேரணை

### பாரதிய ஜனதா கொண்டு வந்தது

புதுடில்லி, டிச. 18

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசு மீது பாரதீய ஜனதாக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.

பாரதீய ஜனதா தலைவர் அடல் - பிஹாரி வாஜ்பாய் வெயரிலான இப்பிரேரணை நேற்று லோகசபையில் அனுமதிக்கப்பட்டது.

காங்கிரஸ் அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவது என்று பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்றுக் காலை தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை— லோகசபையின் கேள்வி நேரத்தை பாரதிய ஜனதா எம். பிக்கள் பகிஷ்கரித்தனர். ராஜ்ய சபையில் அலுவல்கள் இடம் பெறாதவாறு கோஷமிட்டனர்.

அயோத்தி சம்பவங்களைத் தொடர்ந்து, உத்தரப்பிரதேச மாநில பாரதிய ஜனதா அரசு கலைக்கப்பட்டது—

அதனைத் தொடர்ந்து இமாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள பாரதீய ஜனதா அரசுகள் கலைக்கப்பட்டதும் தெரிந்ததே.

(த-எ)

## எழுத்தாளர்களை உயர்த்தியவர் இரசிகமணி கனக. செந்திநாதன்

### கவிஞர் முருகையன் அஞ்சலி

இலைமறை காயாக இருந்த எழுத்தாளர்களை உயர்த்தி விட்ட பெருமை இரசிகமணியையே சேரும். நடைமுறை வாழ்க்கைக்கு அமைய இலக்கியத்தை இரசித்துப் பார்த்து இரசிகமணி என்ற பெயரை அவர் பெற்றார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஆதரவில் அண்மையில் கம்பன் கோட்டத்தில் நடைபெற்ற இரசிகமணி கனக செந்திநாதனின் 15-வது நினைவு தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கவிஞர் இ. முருகையன் இவ்வாறு கூறினார்.

கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சியில் கல்விமான் ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா பேசுகையில் தேசத்தின் அடித்தளமான இலக்கிய வளர்ச்சிக்கு உதவியவர் இரசிகமணி கனக செந்திநாதன் என்று கூறினார்.

கல்லூரிஸ் வே. குமாரசாமி, சு. வியாதன், கி. வெள்ளியாலன் ஆகியோரும் நிகழ்ச்சியில் பேசினார்கள்.

(த-111)

## கப்பல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து பலாலி ஊடாக விமான மூலம் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு செல்ல ஏற்பாடாகி இருந்தது.

(அ-5-8-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சிலுவைக்கு புதிய அதிகாரி

யாழ்ப்பாணம், டிச. 18

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் காணாமல் போனோர் பற்றிய தகவல் பெறும் பிரிவுக்குப் புதிய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஒன்றரை வருடமாக இந்தப் பிரிவின் கடமையாற்றிய செல்வி மரிஜோ இடமாற்றம் பெற்றுச் செல்வதை அடுத்து செல்வி வெரோனிபோல் சூர்ச்சர் என்ற அதிகாரி நேற்றுப் பதவியேற்றார். (ஒ-3)

---

## சென். மேரிஸ் விளையாட்டுக் கழக

நிதிக்காக

## ★ ராஜன்ஸ் ★

## இசைக் குழுவினரின்

## "போர்க் கால ராகங்கள்"

இடம்: சென். மேரிஸ் முத்தமிழ் அரங்கு, நாவாந்துறை.

காலம்: 20 — 12 — 1992 மாலை 7 மணி

(கி-4012)

---

திருநெல்வேலி

## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

### பொதுமுகாமையாளர் வே. குகதாஸ்

## தற்காலிக இடைநிறுத்தம்

கடந்த 16-12-1992 நிகழ்ந்த இயக்குநர்சபையின் ஏகமனதான தீர்மானத்தின்படி திருவர் நிறைவாழ்வு இல்லத்தில் இதுவரை காலமும் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றி வந்த வே. குகதாஸ் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

இதனால் பொதுமுகாமையாளர் மேற்படி சங்கத்தோடு தொடர்பான கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு 17-12-1992இல் இருந்து மறு அறிவித்தல் வரை மேற்படி சங்கத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவரோடு தொடர்பான எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் சங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளாது என்பதை அறியத்தருகின்றோம்.

திரு க. சிவானந்தமூர்த்தி,
கௌரவ செயலாளர்,
இயக்குநர்சபை சார்பில்.

(23681)

---

## யாழ். வர்த்தகர் சங்கம் விடுக்கும் பணிவான வேண்டுகோள்

போக்குவரத்து தடைகாரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலைகள் கூடுவதும் குறைவதும் இயற்கையாகிவிட்டது. தங்கள் கையில் இருக்கும் பொருட்கள் போக்குவரத்துத்தடை வருவதற்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களே. இதை மனதிற்கொண்டு வர்த்தகர்கள் கொள்ளைலாபம் அடிப்பவர்கள் என்ற "பழி" வர்த்தகர்களுக்கு வராமல் மனிதாபிமான முறையில் தங்கள் கைவசம் உள்ள பொருள்களை பொதுமக்களுக்கு நியாயமான விலையில் விற்கும்படி தயவாக வேண்டுகிறோம்.

கூடியவிலையில் பொருள்களை விற்பது கொள்ளைலாபம் அடிப்பதே. போர்க்கால சூழ்நிலையில் நொந்து நலிவுற்றிருக்கும் மக்களை மேலும் பாதிக்காது நிதானமான விலையில் விற்று மக்கள் எங்களை கொள்ளையர், துரோகிகள் என்று கூறுவதற்கு இடம் கொடுக்காது தயவு செய்து நிதான விலைக்கு விற்கவும். கொள்ளை லாபம் அடிப்பதால் நீதிக்குப்புறம்பானதும், கடவுள் தண்டனைக்கும் இன்னும் வேறு உக்கிரமான தண்டனைகளுக்கும் நிச்சயமாக உள்ளாக நேரிடும்.

மேற்கூறியவற்றை கருத்திற்கொண்டு எந்தவித இன்னல்களுக்கும் வர்த்தகர்கள் ஆளாகாது, வர்த்தகர்கள் இந்த நிலையிலும் நிதானமானவர்கள், நியாய விலைக்கே விற்கிறார்கள் என்ற நன்மதிப்பை பொதுமக்களிடம் இருந்து பெறவேண்டும்.

எங்கள் அறிவித்தலையும் மீறி கொள்ளைலாபம் அடிக்கும் வர்த்தகர்கள் இனம் காணும் பட்சத்தில் கடும் தண்டனைக்குள்ளாவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கு. கனகசபாபதி
உபதலைவர்

நா. த. அன்னலிங்கம்
பொதுச் செயலாளர்

(இ/4013)

---

## இடமாற்றப் பட்டியல் வெளியாகியது

நாவலி, டிச 18

வடக்கு - கிழக்கு மாகாண அரச திணைக்களங்களில் பணிபுரியும் எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் ஆகியோருக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்துறை அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றப் பட்டியலின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் யாழ். செயலகத்திலும் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் பணிபுரியும் 12 பேர் வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து 18 பேர் யாழ். மாவட்டத்திற்கும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (உ-100)

## கிளினிக்குகள் மீண்டும் இயங்குகின்றன

தெல்லிப்பழை, டிச. 18

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் கிளினிக்குகள் வழமைபோல் கந்தரோடை சனசமூக நிலையத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக மேற்படி கிளினிக்குகள் இயங்காமல் இருந்தன. (த-68)

## எம். பியாகவர இப்படியும் கட்டுப்பாடு

"குடும்பக்கட்டுப்பாட்டை மீறின் எம். பியாக முடியாது. இரண்டு பிள்ளைகளுக்கு அதிகமாக பிள்ளைகளைப் பெறுவோர் எம். பி. மற்றும் எம். எல். ஏ. பதவிகளுக்கான தகுதியை இழப்பார்கள்".

இப்படியான சட்டம் ஒன்று இந்திய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருக்கிறது.

இந்திய அமைச்சரவை இந்தச் சட்டத்திருத்தம் குறித்த நகலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அனுமதி வழங்கியுள்ளது. (ஒ-3)

---

## இலங்கையின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே இந்த உதவி கடன் வழங்கப்பட்டது.

இதனிடையே —

அதிகரித்து வரும் இராணுவச் செலவால் இலங்கையின் பொருளாதார நிலை கட்டுப்படுத்த முடியாத அளவு வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

நிதி நிலைமையில் இலங்கை வளர்ச்சியைக் காட்டத்தவறினால், இலங்கைக்கு வழங்கும் உதவிகள் குறித்த தமது நிலைப்பாட்டை உதவும் நாடுகள் மீள்பரிசோதனை செய்ய வேண்டிவரும். — இவ்வாறு அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-3)

---

## அடுத்து...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை இன்னும் சீராகாததால், அடுத்த மாத மத்தியில் இங்கிருந்து புறப்படும் 'குமுணை'யில் நோயாளர்கள் கொண்டு செல்லப்பட மாட்டார்கள் என்றும்—

அடுத்த தடவை 'குமுணை' வரும்போது நோயாளர் சேவை மீண்டும் ஆரம்பமாகும் என்றும் [illegible] தெரிவிக்[illegible]

---

திருநெல்வேலி

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## விசேட அறிவித்தல்

### மீண்டும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல்

கடந்த 16-12-1992 நிகழ்ந்த இயக்குநர்சபைத் தீர்மானத்தின்படி திருவர் நிறைவாழ்வு இல்லத்திலிருந்து அண்மைக் காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக வெளியேற்றப்பட்ட மாணவ, மாணவிகளை மீண்டும் இல்லத்தில் வந்து சேர்ந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இயக்குநர்சபை சார்பில்,
க. சிவானந்தமூர்த்தி,
செயலாளர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
திருநெல்வேலி.

(23682)

---

# மரண அறிவித்தல்கள்

## சகோதரி அன்னமரியாள் ஆசீர்வாதம்

இலங்கை பெந்தெகொஸ்தே சபையில் ஊழியம் செய்த சகோதரி அன்னமரியாள் ஆசீர்வாதம் (17-12-92) வியாழக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்தார். அன்னாரின் அடக்க ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை (18-12-92) காலை 8-00 மணிக்கு சுண்டுக்குளி சபைச்சாலையில் இடம்பெற்று, நல்லடக்கத்திற்காக வசந்தபுரம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரன் ஆ. மகேந்திரன்.

இலங்கை பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டி வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(23680)

## கனகசபை இராஜசுந்தரம்

(இளைப்பாறிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் A.S.P)

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருநெல்வேலி வடக்கு வாசியுமான கனகசபை இராஜசுந்தரம் புதன்கிழமை இரவு சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்றவர்களான கனகசபை, கற்பகசவுந்தரி ஆகியோரின் அன்பு மகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், ரவி (ஹற்றன் நஷனல் வங்கி, கொழும்பு), யோகினி, கீர்த்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், டீப்தியின் மாமனாரும், ஜெகஜனனி, அஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், மனோன்மணி ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, கனகசவுந்தரி, சிவசுப்பிரமணியம் (நீர்ப்பாசன பொறியியலாளர்) ஆகியோரினதும், யாலரத்தினத்தின் (அவுஸ்திரேலியா) அன்புச் சகோதரரும், ஜெயசுந்தரம் (ஆசிரியர், கண்டி), ஜெயலக்ஸ்மி (மேனகா, இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (17-12-92) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஜெகதா
(மனைவி)

திருநெல்வேலி வடக்கு.

(23688)

## மருதப்பு செல்லத்துரை

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மருதப்பு செல்லத்துரை அவர்கள் 16-12-92 அன்று புங்குடுதீவில் காலமானார்.

இவர் மருதப்பு காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், தையல்முத்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பசுபதி, தங்கம்மா, அன்னமுத்து ஆகியோரின் சகோதரனும், மனோன்மணி (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), கேதீஸ்வரன் (லண்டன்), தயாநிதி (பும். நவி. ம. நோ. கூ. சங்கம்), நவமணி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜநாதன் (பிரான்ஸ்), சசி மங்களாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செ. ஸ்ரீஸ்கந்தராஜா
(மகன்)

இல. 45, புதிய அத்தியடி வீதி,
யாழ்ப்பாணம்.

(23690)

---

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org